<u>**DEPOSITION OF WITNESS**</u>

<u>**(Chapter XXIII Code of Criminal Procedure)**</u>

<u>**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR**</u>

| | | |
|---|---|---|
| CC | : | 57/ 2024 |
| Deposition of Witness for | : | PW.3 (LW- 4) |
| Name | : | திரு.சிவக்குமார் |
| Father's Name | : | கந்தசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |
| Accused | : | எதிரி ஆஜர் |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1973 of that 06th day of November 2025.**

<u>**முதல் விசாரணை:**</u>

நான் சுக்காலியூரில் வசிக்கின்றேன். டிரைவராக வேலை செய்து வருகின்றேன். 09.04.2023–ம் தேதி மதியம் 3.30 மணியளவில் சுக்காலியூர் செக்போஸ்ட் அருகில் நானும், எனது நண்பர் சரவணன் என்பவரும் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது TN 47 BA 6055 என்ற பதிவு எண் கொண்ட இரு சக்கர வாகனத்தில் எனது உறவினர் பொம்முராஜ் என்பவர் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சென்று கொண்டிருந்தார். அப்போது தெற்கிலிருந்து வடக்கு நோக்கி TN 09 CP 7200 என்ற பதிவெண் கொண்ட கார் வேகமாக வந்து பொம்முராஜ் ஓட்டிசென்ற இரு சக்கர வாகனத்தில் மோதியது. ஆஜர் எதிரிதான் காரை ஓட்டி வந்த நபர். அவரது பெயர் எனக்கு தெரியாது. நானும், சரவணன் என்பவரும் சென்று பார்த்தபோது பொம்முராஜ்க்கு தலை, நெஞ்சு மற்றும் கால் பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. அவரை தனியார் ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். இது சம்பந்தமாக தாந்தோணிமலை காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்து போலீசார் என்னையும் விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>**

பொம்முராஜ் மற்றும் அவரது மகள் விஜயலட்சுமி ஆகியோர் எனக்கு உறவினர்கள் என்றால் சரிதான். சத்தம் கேட்டுத்தான் நான் விபத்தை பார்த்தேன் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் விபத்து சமயத்தில் போலீசார் தடுப்பு வைத்திருந்தார்களா என்றால் அவ்வாறு இல்லை. தற்போதுதான் அவ்வாறு வைக்கப்பட்டுள்ளது. சம்பவ இடத்தில் காவல்துறையால் தடுப்பு வைக்கப்பட்டிருந்தது என்றும், நான் அவ்வாறு வைக்கவில்லை என்று தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தெற்கிலிருந்து வடக்கு செல்லும் வாகனங்கள் மற்றும் வடக்கிலிருந்து தெற்கு செல்லும் வாகனங்கள் சம்பவ இடத்திற்கு அருகாமையில் நிதானமாகத்தான் செல்லமுடியும் என்றால் சரியல்ல.

விபத்து நடுரோட்டில் நடைபெற்றதா என்றால், நான் விபத்தை சத்தம் கேட்டுத்தான் பார்த்தேன். காயம்பட்ட நபரை மருத்துவமனைக்கு அனுப்பிவிட்டு அதன் பின்பு நானும் சென்று பார்த்தேன். காயம்பட்ட நபரை மேல் சிகிச்சைக்கு அழைத்து சென்றுவிட்டார்கள். விபத்து சம்பந்தமாக நான் புகார் கொடுக்கவில்லை. சரவணன் என்பவரும் புகார் கொடுக்கவில்லை. எனக்கு விபத்து பற்றி நேரடியாகத் தெரியாது என்றாலும், விபத்தில் அடிபட்ட நபர் எனது உறவினர் என்பதால் அவருக்கு இழப்பீடு பெற்றுத் தருவதற்காக அவருக்கு ஆதரவாக போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சுசெய்யப்பட்டு, பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.

(ஓம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)
தலைமை குற்றவியல் நடுவர்,
கரூர்.